8055

தரம் 07

முதலாந் தவணைப் பரீட்சை ~ 2018

புவியியல்

சுட்டெண் : 4393 F-நைலர் நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி - I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. பூமியின் முனைவு விட்டம்,
1. 12757 km 2. 12577 km 3. 12714 km 4. 12417 km

02. உலகின் உயரமான மலையின் பெயர்,
1. எல்பரஸ் 2. கிளிமஞ்சரோ 3. மெக்கின்ஸ் 4. எவரெஸ்ட்

03. கண்டங்களுக்கிடையில் அமைந்துள்ள பரந்த நீர்ப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
1. கடல்கள் 2. சமுத்திரங்கள் 3. குடாக்கள் 4. களப்புகள்

04. லிபியா அமைந்துள்ள கண்டம்,
1. ஐரோப்பாக் கண்டம் 2. ஆசியா கண்டம்
3. அமெரிக்கா கண்டம் 4. ஆபிரிக்காக் கண்டம்

05. கொழும்பு நகரத்தின் அண்ணளவான நெடுங்கோடு,
1. 79^0 2. 80^0 3. 81^0 4. 82^0

(5x2=10புள்ளிகள்)

- கீழே தரப்பட்ட பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

ஐந்து , அத்திலாந்திக் , கடகக்கோடு , பெரிய , ஏழு , இந்து , வங்காள விரிகுடா , மத்தியகோடு . ஆள்புலக்கடல் எல்லை

06. ..... மெக்சிக்கோ நாட்டை இருகூறாக்கிச் செல்கிறது.

07. இலங்கையில் சூறாவளித் தாக்கத்திற்கு ..... வில் உருவாகும் அமுக்க இறக்கங்களே காரணமாக அமைகிறது.

08. புவி ..... கண்டங்களினால் ஆக்கப்பட்டுள்ளது.

09. இலங்கையின் ..... 12 கடல் மைல்களாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

10. 0^0 மத்திய கோடும் 0^0 நெட்டாங்கும் ஒன்றை ஒன்று வெட்டிச் செல்லும் சமுத்திரம் ..... ஆகும்.

(5x2=10புள்ளிகள்)

Scanned by CamScanner

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

11. அத்திலாந்திக் சமுத்திரத்தில் வடகடல் அமைந்துள்ளது. ( )

12. ஆட்டிக் சமுத்திரத்தில் செங்கடல் அமைந்துள்ளது. ( )

13. சர்வதேச திகதிக்கோடு கிறீன்விச் நகரத்தினூடாக வரையப்பட்டுள்ளது. ( )

14. இலங்கையின் மிகக் கூடிய அகலம் பருத்தித்துறை முனையிலிருந்து தேவேந்திர முனைவரை அளவிடப்படுகிறது. ( )

15. உலகில் காணப்படும் கண்டங்களில் மிகச்சிறியது அவுஸ்திரேலியா ஆகும். ( )

(5x2=10புள்ளிகள்)

பொருத்தமான முறையில் தொடர்புபடுத்துக.

16. சங்கமன் கந்த	இலங்கை
17. இலண்டன்	அநுராதபுரம்
18. இந்துசமுத்திரம்	அம்பாறை
19. 32 km	பிரித்தானியா
20. மிஹிந்தலை	பாக்குநீரிணை


(5x2=10புள்ளிகள்)

பகுதி - II

1ஆம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

01) தரப்பட்ட உலகப்படத்தினை அவதானித்து கீழ்வரும் இடங்களுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்தினை அடைப்பினுள் எழுதுக.

1. மத்தியதரைக்கடல் (.....)
2. ஓகொடஸ்க் கடல் (.....)
3. ஜப்பான் கடல் (.....)
4. கரீபியன் கடல் (.....)
5. மஞ்சள் கடல் (.....)
6. அரபிக் கடல் (.....)



(6x2=12புள்ளிகள்)

Scanned by CamScanner

02) i சமுத்திரம் என்றால் என்ன? உமது நாடு அமைந்துள்ள சமுத்திரத்தின் பெயரை எழுதுக.
ii ஆசியாக்கண்டத்தினுள் அமைந்துள்ள கடல்கள் இரண்டு தருக.
iii உலகிலுள்ள கண்டங்களில் பரப்புக் குறைந்த நான்கு கண்டங்களைப் பெயரிடுக.

(4+4+4=12புள்ளிகள்)

03) i இலங்கையின் புவியியல் ரீதியான தனித்துவங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
ii 'சார்பு அமைவிடம்' என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
iii இலங்கையின் தனி அமைவிடத்தைக் குறிப்பிடுக.

(4+4+4=12புள்ளிகள்)

04) i கரையோர தரைத்தோற்ற அம்சங்கள் நான்கு தருக.
ii மத்தியமலைநாட்டு தரைத்தோற்றப் பண்புகள் நான்கு தருக.
iii இலங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விடயங்கள் நான்கு தருக.

(4+4+4=12புள்ளிகள்)

05) i இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் வழிமுறைகள் நான்கு தருக.
ii இடியுடன் கூடிய மழை கிடைக்கும் நான்கு மாதங்களைக் குறிப்பிடுக.
iii இலங்கையின் கரையோரத்தில் அமைந்திருக்கும் மாநகரங்கள் நான்கைப் பெயரிடுக.

(4+4+4=12புள்ளிகள்)

06) i ஆசியாக்கண்டத்தில் காணப்படும் பெரிய நாடுகள் நான்கைக் குறிப்பிடுக.
ii ஆபிரிக்காக் கண்டத்தில் காணப்படும் நாடுகள் நான்கைக் குறிப்பிடுக.
iii தென் அமெரிக்காக் கண்டத்தில் காணப்படும் நாடுகள் நான்கைக் குறிப்பிடுக.

(4+4+4=12புள்ளிகள்)

07) தரப்பட்டுள்ள மாதிரிக்கோளத்தில் A, B, C, D, E, F என அடையாளமிடப்பட்டுள்ள அகலக் கோட்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

A) .....


B) .....

C) .....

D) .....

E) .....

F) .....



(6x2=12புள்ளிகள்)

Scanned by CamScanner